ஏற்படுத்தவில்லை. அப்படி ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்பு மருத்துவ கல்வித்துறை இயக்குநரிடம் கோரப் பட்டு பெறப்பட்டது. இதய நோய் கிசிச்சைப் பிரிவு பகுதி மற்றும் உபகரணங்களையும் வாங்குவதற்காக 1,31,512 ரூபாய் தொடர் செலவாகவும், ரூபாய் 9.5 லட்சம் தொடா ராச் செலவாகவும் மருத்துவக் கல்வி இயக்குநர் குறிப்பில் இருக்கிறது. ஆனால், இந்தக் கருத்தை ஆய்வு செய்து பார்த்த தற்கு பின்னர் நிதித் துறையின் கருத்தை வைத்து 1980–81-ம் ஆண்டில் 2-வது நிதி திட்டமாக செய்யலாம் என்று பரிசிலனையில் இருக்கிறது.

கால்நடை ஆய்வாளர் பயிற்சி.

* வினா எண். 458— திரு. கே. ஜே. சுப்பிரமணியன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை ஆய்வாளர் பயிற்சி வருகிற 1978–79ஆம் ஆண்டு துவக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருக்கு பயிற்சி அளிக்கப் படும் ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :

(அ) துவக்கப்படாது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. ஜே. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கால்நடை ஆய்வாளர் பயிற்சிக்கான குறைந்த பட்ச கல்வித் தகுதி என்ன ? அப்படி எத்தனை பேர் வேலையில் இருக் கிறார்கள் என்று அமைச்சர் அறிவிப்பாரா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை ஆய்வாளர் பயிற்சிக்கு தேர்ந் தெடுக்கப்பட குறைந்த பட்ச தகுதி எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும். இந்த பயிற்சியின காலம் 11 மாதம். இது சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டது. தமிழ்நாட்டில் 3,024 கால்நடை ஆய் வாளர்கள் உள்ளனர். இதில் 1,071 கால்நடை ஆய்வாளர் நிலை 1-ம், 1953 கால்நடை ஆய்வாளர் நிலை 2-ம் அடங்கும்.

1979 மார்ச் 17]

திரு. கே. ஜே. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கால்நடை ஆய்வாளர்களுக்கு டெகனிகல் பயிற்சி அளிக்கப் படுமா ? அப்படி அளிப்பதாக இருந்தால் இந்த ஆண்டு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர் களே, அப்படிப்பட்ட திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

திரு. துரை. கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத தலைவர் அவர்களே, கால் நடை ஆய்வாளர் பயிற் சியை துவக்க உத்தேசம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள், ஆனால், இப்பொழுது நம்முடைய அரசு கிராமங்களில் உள்ள சிறு விவசாயிகளுக்கு, மானியமாக கறவை மாடுகள், உழவு மாடுகள் கொடுத்து வருகின்றன என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் கால் நடை ஆய் வாளர் பயிற்சியே தொடங்கப்படவில்லை என்றால் அந்த கால் நடைகளுக்கு எப்படி வைத்தியம் செய்ய இயலும்? அத னால் இப்பயிற்சியை துவக்குவதற்கு, அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால் நடை ஆய்வாளர் பயிற்சி நிறுத்தப் பட்டதால் காலி இடங்களைப் பூர்த்தி செய்ய களப்பணி உதவி யாளர்களை நியமிக்க ஏற்கனவே அரசுக்கு பிரேரணை அனுப்பப் பட்டது. கால் நடை ஆய்வாளர்களை விட குறைந்த சம் பளத்தில் களப்பணி உதவியாளர்களை நியமிப்பதற்கு அரசுக்கு அனுப்பப்பட்ட பிரேரணை இது வரை ஒத்துக் கொள்ளப்பட வில்லை. ஆகவே, 1979–80 ஆம் ஆண்டிற்குப் பின்னால் தான் அது துவக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு துணைத் தலைவ ரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரை கோவிந்தராசன் அவர்கள் அமைச்சருக்குப் பக்கத்தில் இருக்கிறார், அங்கேயே கேட்டிருக்கலாமே.

திரு. இ. தமிழரசன் : பேரவைத் துணைத் தலைவரவர் களே, கால்நடை மருத்துவர்கள் எத்தனை பேர் வேலையில்லா மலிருக்கிறார்கள் ? அவர்களுக்கு வேலை கொடுக்க என்ன திட்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கால் நடை மருத்துவர்களைப் பற்றிய கேள்வியல்ல இது, கால் நடை ஆய்வாளர்களை ஒட்டியது மூலக் கேள்வி.